# வலயக்கல்விஅலுவலகம் - யாழ்ப்பாணம்

## இரண்டாம் தவணைப்பரீட்சை– 2017

| தரம் - 10 | தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் | நேரம் :- 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

### பகுதி – I

❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1) கணினிகள் தரவுகளை சேகரிக்கின்றன. இக்கூற்றின் மூலம் வெளிப்படுத்தப்படுவது பயனர் தரவுகளை …………..செய்வதற்கு கணினிகள் அனுமதியளிக்கின்றன.
   1) செய்முறை   2) உள்ளீடு   3) வெளியீடு   4) சேமிப்பு

2) பின்வருவனற்றுள் கணினியின் தரவுச்செய்முறை தொழிற்பாட்டின் பிரதான அம்சம் அல்லாதது எது?
   1) தரவு சேகரித்தல்
   2) தரவினை தகவலாக செய்முறைப்படுத்தல்
   3) தரவு அல்லது தகவலை பகுப்பாய்வு செய்தல்
   4) தரவினை அல்லது தகவலை சேமித்தல்

3) ஒரு இலக்கமுறைக் கமரா மூலம் படம் ஒன்று எடுக்கப்பட்ட பின்னர் சரியான முறையில் செய்முறைப்படுத்தப்பட்டதும் அதன் பிரதி பெறப்படுதல் கருதப்படுவது?
   1) செய்முறை   2) உள்ளீடு   3) வெளியீடு   4) சேமிப்பு

4) ……………என்னும் கருவியானது விலங்குகளைக் கணக்கிடுதல் , இனங்காணல் போன்ற செயற்பாடுகளிற்காக பயன்படுத்தப்படும்.
   1)தன்னியக்க வண்டுக்கட்டுப்பாட்டு பொறி
   2)வானொலி மீடியன் அடையாளமிடுதல் உபகரணம்
   3)காந்தபபிரிவு விம்பமாக்கற்பொறி
   4)வானிலை அளவீட்டுப்பொறி

5) கணினி ஒன்றில் காணப்படக்கூடிய பௌதீகரீதியிலான சாதனங்களை குறிப்பிடப் பயன்படுத்தும் சொல்
   1) மென்பொருள்(Software)   3)வன்பொருள்(Hardware)
   2) பிறழ்பொருள்(Spyware)   4)நிலைபொருள (Firmware)

6) பின்வருவனவற்றுள் எது/எவை வர்த்தகநிலையங்களில் பொதுவாகப்பயன்படுத்தப்படும் சாதனங்களாக காணப்படுகின்றது?
   1) OCR   2) Inject printer   3)Thermal printer   4)Digital camera

7) புளூ-ரூத்( Bluetooth) தொழில்நுட்பத்தின் பயன்பாடாக அமைவது
   1) நுண்ணலைத் தொடர்பாடலின் போது
   2) செல்லிடத்தொலைபேசிகளிற்கிடையில் மட்டும் சமிக்ஞை பரிமாற்றத்தின் போது
   3) சாதனங்களிற்கிடையில் நாண்களற்ற தொடர்பாடலின் போது
   4) செய்மதித்தொடர்பாடலின் போது


kalvi.lk

8) தொலைக்காட்சி ஒளிபரப்பானது ............................தொடர்பாடலுக்கானஓர் உதாரணமாக கருதப்படலாம்.

1) Simplex 2)Half duplex 3)Full duplex 4) Point to point

9) ஓர் கணினிச் செயற்பாட்டின்போது கட்டாயமாக தொழிற்படவேண்டிய சாதனமாக கருதப்படுவது

1) Speaker 2)Processor 3) CD ROM 4)USB Device

10) நிலைபொருளானது நிறுவப்பட்டிருக்கும் இடம்

1) RAM 2)Video memory 3)Cache memory 4)ROM

11) உள்ளீட்டுச்சாதனமாகவும் வெளியீட்டுச்சாதனமாகவும் தொழிற்படக்கூடியது

1) Keyboard 2) Printer 3)Touch screen 4)Scanner

12) பின்வருவனவற்றுள் எது/எவை தரவுகளைக் காப்பெடுப்பதற்காக பயன்படுத்தப்படலாம்?

1) CD 2)Magnetictape 3)google drive 4) எல்லாம் சரி

13) 29 என்ற பதின்ம எண்ணுக்கு சமவலுவான இரும எண்?

1) $11011_2$ 2) $11101_2$ 3)$01001_2$ 4) $10101_2$

14) 17 என்ற எண்ம எண்ணிற்கு சமவலுவான பதினறும எண்?

1) $10_{16}$ 2) $15_{16}$ 3)$C_{16}$ 4)$F_{16}$

15) பின்வருவனவற்றுள் மிகச்சிறிய பெறுமானத்தைக் கொண்டது எது?

1) $11001001_2$ 2) $145_{10}$ 3) $77_8$ 4) $49_{16}$

16) $1011_2+111_2$ சமவலுவானது?

1) $10101_2$ 2) $10010_2$ 3) $10111_2$ 4) $10011_2$

17) EBCDIC ன் விரிவாக்கம்?

1) Extended Bit Coded Decimal Interchange Code
2) Extended Binary Coded decimal Interchange Code
3) Extensible BinaryCoded decimal Interchange Character
4) Extended Binary Coded Decimal Interchange Character

18) பின்வருவனவற்றுள் வலிதற்ற BCD குறிமுறை எது?

1) 0010 2) 0101 3) 1111 4) 1001

19) ASCII குறிமுறையில் 'F' என்னும் எழுத்து $1000110_2$ எனக் எனக் குறிக்கப்பட்டால் 'C'எழுத்து குறிப்பது எது?

1) $1000011_2$ 2) $1110001_2$ 3) $1001100_2$ 4) $1111100_2$

20) 8MB க்கு சமவலுவானது?

1) $2^{13}$GB 2) $2^{13}$KB 3) 128 Bit 4. 1024 Bytes



kalvi.lk

21) பின்வருவனவற்றுள் அதிக கொள்ளளவைக் கொண்ட கோப்பாக காணப்படுவது எது?

1)1 MBஅளவுடைய .docx கோவை

2) 912 KBஅளவுடைய .gif கோவை

3) 700 Bytes அளவுடைய .txt கோவை

4) 1024 Bytes அளவுடைய .jpeg கோவை

22) பின்வருவனவற்றில் எது கீழ்க்காணப்படும் உண்மை அட்டவணையை விளக்கக்கூடிய தருக்க செய்கையாக காணப்படுகின்றது.

| A | B | X |
|---|---|---|
| 0 | 0 | 0 |
| 1 | 1 | 1 |
| 0 | 1 | 0 |
| 1 | 0 | 0 |


1) AND 3)OR

2) NAND 4)NOR

23) தரப்பட்டுள்ள தருக்கப்படலையில் A=1 ஆகவும் B=NOT A ஆகவும் காணப்படும் போது பின்வருவனவற்றில் தவறானது

1) C=1 3) $\overline{B}$=0


2) C=0 4) $\overline{A}$=0B C




24) கீழ்க்காணப்படும் தருக்கப்படலைக்கான பூலியன் கோவையாக அமைவது

1) $\overline{A+B}\,.\,\overline{B}$ 3)($\overline{A}$ .B) + B

2) $\overline{(A.B)}\,.\,\overline{B}$ 4)($\overline{A}$ + $\overline{B}$) . $\overline{B}$





25) அருகில் காட்டப்பட்டுள்ள வரைபடத்தை கருதுக.A,B என முகப்பு அடையாளமிடப்பட்டவற்றில் மிகப்பொருத்தமானது பின்வருவனவற்றில எது?

1) A= பணிசெயல் முறைமை B= வன்பொருள்

2) A= பயன்பாட்டுமென்பொருள் B= வன்பொருள்

3) A= வன்பொருள் B= முறைமைமென்பொருள்

4) A= முறைமைமென்பொருள் B= வன்பொருள்




26) பணிச்செயல்முறைமையின் பயன்பாட்டு மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுக்கள் A,Bஇனை கருதுக.

A) கொள்பணி முகாமை(Task manager)ஆனது கணினியில் செயற்படும் செய்நிரல்கள், முறைவழிகள் பற்றிய தகவல்களையும் கணினியின் வழமையான நிலைகளையும் காட்டுகின்றது

B) தரவு ஒருங்கிணைப்பு மென்பொருள் (Data synchronization software) மூலமாக தனியான செலுத்தியை பல தருக்கச் செலுத்திகளாக பிரிக்கும் வசதி செய்யப்படுகின்றது.

1) கூற்று A சரி கூற்று B பிழை

2) கூற்று A பிழை , கூற்று B சரி

3) A , B இரு கூற்றுக்களும் சரி

4) A , B இரு கூற்றுக்களும் பிழை


kalvi.lk

27) பின்வரும் கணினி மென்பொருட்களை கருதுக. இவற்றுள் எது / எவை பணிசெயல் முறைமை மென்பொருள் ஆகும்?

A) Windows8  B) Linux  C)Android  D)Minix3  E)Mozilla

1) A,B,C,E மட்டும்  2)A,B,C மட்டும்  3)A,B,C,D மட்டும்  4)A,B,C,D,E எல்லாம்

28) பின்வருவனவற்றுள் பணிசெயல் முறைமைகளின் பணி அல்லாதது?

1) காப்பு முகாமை  2)நினைவக முகாமை  3)கோப்பு முகாமை  4)பல்பயன்பாட்டு முகாமை

29) பின்வருவனவற்றுள் எது பணிசெயல் முறைமையின் கோப்பு வகையாக கருதப்பட முடியாதது?

1) FAT32  2)NTFS  3)ReiserFS  4)PPTX

30) பின்வருனவற்றுள் இலவசமாக பெறக்கூடிய சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள்/கள் எது/எவை?

A) Libre office writer  B) Open office writer  C) Ms Word

1) A மட்டும் சரி  2) A,B சரி  3)A,C சரி  4)A,B,C எல்லாம் சரி

31) மேகக்கணினியை பயன்படுத்துவதன் மூலம் ஆவணங்களினை தயாரிப்பதால் பெற்றுக்கொள்ளக்கூடிய நன்மை அல்லாதது

1) கணினி வன்வட்டில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருளிற்கென மேலதிக இடத்தினை ஒதுக்க வேண்டிய அவசியமில்லை.
2) இணைய வசதியுள்ள எக்கணினிகளிலும் ஆவணங்களினை திறக்கக்கூடியதாக இருத்தல்.
3) கணினிகளில் சொல்முறை வழிப்படுத்தல் மென்பொருள் நிறுவப்பட்டிருத்தல்.
4) ஆவணங்களினை சேமிக்கவென இணையத்தில் ஓர் இடம் ஒதுக்கப்பட்டிருத்தல்.

32) திறக்கப்பட்டிருக்கும் ஓர் ஆவணத்தின் பெயர் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் இடம்

1) தத்தல்கள்(Tabs)  3)தலைப்புப்பட்டை(Title bar)
2) நாடா(Ribbon)  4)நிலைமைப்பட்டை(Status bar)

33) A. Different styles of Word Art are available in word processing software.

B. ***<u>Different styles of Word Art are available in word processing software.</u>***

A என முகப்பு அடையாளமிட்ட வசனமானது B யாக மாற்றப்பட வேண்டுமெனின் பயன்னடுத்தப்பட வேண்டிய வடிவமைப்புக்கள்

1) Bold,Italic  2)Underline , Italic  3) Bold,Underline  4)Bold,Italic,Underline

34) ஓர் ஆவணத்தை திறத்தல்,அதில் ஒரு பகுதியை பிரதியெடுத்தல்,ஒட்டுதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் குறுக்குவழிச்சாவிகள் முறையே

1) Ctrl + C , Ctrl + O , Ctrl + V
2) Ctrl + O , Ctrl + C , Ctrl + V
3) Ctrl + V , Ctrl + O , Ctrl + C
4) Ctrl + O , Ctrl + V , Ctrl + C

684

35) ஓர் பந்தியினை இடது பக்கமாக உட்தள்ளுவதற்கு பயன்பதுத்தப்படுவது

1)  2)  3)  4) 

36) பின்வரும் கூற்றுக்களில் சரியான கூற்றுக்களை இனங்காண்க.

A) குறுக்குவழிச்சாவிகளைப் பயன்படுத்துவதன் மூலமே ஓர் ஆவணத்தை Save செய்யலாம்.

B) ஓர் புதிய ஆவணத்தை திறப்பதற்கு Ctrl +N பயன்படுத்தப்படலாம்.

C) ஓர் ஆவணத்திலுள்ள எல்லா பகுதிகளையும் ஒரே தடவையில் தெரியு செய்வதற்கு CTRL +A பயன்படுத்தப்படும்.

1) A,B சரி　　2) B,C சரி　　3)A,C சரி　　4)A,B,C சரி

37) ரவி பிவ்வரும் வடிவ அமைப்புக்களை உள்ளடக்கி ஓர் ஆவணத்தை தயாரிக்க விரும்புகின்றார்.

A) அளவு –A4　　B) திசைகோள்- Portrait　　C) பக்க எல்லை-வலது 2'' , இடது – 2''

மேற்காட்டப்பட்டுள்ள வடிவ அமைப்புக்கள் அனைத்தையும் ஒரே தடவையில் மாற்றம் செய்து கொள்வதற்கு பொருத்தமான சொல்லாடற்பெட்டி(dialog box)

1) Font dialog box　　2)Page setup dialog box

3)Paragraph dialog box　　4) Style dialog box

38) சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளினுடைய கோப்பு நீட்சி அல்லாதது


1) .doc　　2) .docx　　3) .jpg　　4).odt


Education கல்வி අධ්‍යාපන

39) ...........ஆனதுசொல்முறை வழிப்படுத்தல் ஆவணத்திலுள்ள எழுத்துப்பிழைகளை திருத்துவதற்கு பயன்படுத்தப்படுகிறது

1) 

2) 

3) 

4) 


40) சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் காணப்படக்கூடிய வசதிகள் தொடர்பான கூற்றுக்களில் சரியானவை

A) சொற்களை தேடக்கூடியதாக இருத்தலும் மாற்றுச்சொற்களை இடுதலும்.

B) அஞ்சல் இணைப்பை அமைக்கக்கூடியதாக இருத்தல்.

C) அச்சிட முன்னர் அதன் முன் காட்சிகளை பார்வையிடவும் பின்னர் ஆவணங்களை அச்சிடவும் முடிதல்.

1) A,B மட்டும்　　2) B,C மட்டும்　　3)A,C மட்டும்　　4)A,B,C எல்லாம்

**[20 X 2 = 40 புள்ளிகள்]**

## Part II

**முதலாம் வினா உட்பட நான்கு வினாக்களுக்கு விடை தருக**

1)

1. பின்வரும் அட்டவணையை உங்களுடைய விடைத்தாளில் பிரதி செய்க. கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விபரங்கள் தரவா தகவலா என்பதனை குறித்துக் காட்டுக?

| | விபரம் | தரவு | தகவல் |
|---|---|---|---|
| i | 04022002 | | |
| ii | ரமாவினுடைய Z– புள்ளி | | |
| iii | ICT பாடத்தின் உயர்ந்தபட்ச புள்ளி | | |
| iv | ஒரு மாணவனின் ICT பாட புள்ளி | | |

2. ATM இல் பயன்படுத்தப்படுகின்ற உள்ளீட்டுச் சாதனங்கள் 2 தருக?


3. அழிதகு மற்றும் அழிவுறா நினைவகங்களுக்கிடையிலான வேறுபாடு ஒன்று தருக?

4. தரவு ஊடுகடத்தும் ஊடகங்களான செங்கீழ்க்கதிர் மற்றும் புளுருத் இற்கிடையிலான வேறுபாடு ஒன்று தருக?

5. 2F1 எனும் பதினறும எண்ணிற்கு சமனான எண்ம எண்ணைக் கண்டறிக ?

6. உயர்த விலை, குறைச்தளவு கொள்ளளவு மற்றும் மிகவிரைவான தரவு அணுகல் வேகம் கொண்ட கணிணி நினைவகத்தின் பெயரை எழுதுக?

7. பின்வரும் தர்க்கப் படலையைக் கருதுக.



மேலே காட்டப்பட்டுள்ள தர்க்கச் படலைக்குச் சமனான தர்க்கச் படலையினையும் அதற்கான உண்மை அட்டவணையினையும் வரைக?

8. அப்பிள் நிறுவனத்தால் தனியாள் கணிணிகளுக்காக விருத்தி செய்யப்பட்டஇயங்கு முறைமை ஒன்று தருக?

9. வரைபியல் பயனர் இடைமுகத்தின் நான்கு அம்சங்கள் தருக ?.


10. மென்பொருள் பாகம் ஒன்றில் காணக்கூடிய கோப்பு நீட்சிகளும்,கோப்பு வகைகளும், கீழே தரப்பட்டுள்ளன.பொருத்தமான விடைகளைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புக?

| | கோப்பு நீட்சிகள் | கோப்பு வகைகள் |
|---|---|---|
| i | .docx | ........................ |
| ii | .htm | ........................ |
| iii | .cpp | ........................ |
| iv | .pptx | ........................ |

(Ms Excel, Ms Power point, Java, C++, html, Ms word)

**[10 X 2= 20 புள்ளிகள்]**

2) A) கீதா தனது வேலைகளை இலகுபடுத்துவதற்காக கீழ்க்காணும் கணினித்தொகுதியைப் பயன்படுத்துகின்றார்




முகப்பு அடையாளங்களைப் பயன்படுத்தி பின்வரும் அட்டவணையை பூர்த்தி செய்க

| | சாதனத்தின் பெயர் | உள்ளீடு (✓) | வெளியீடு (✓) |
|---|---|---|---|
| **eg. A** | நுணுக்குப்பன்னி | ✓ | |
| **B** | | | |
| **C** | | | |
| **D** | | | |
| **E** | | | |
| **F** | | | |

B)A – J வரையான முகப்பு அடையாளங்களிற்கு பொருத்தமான சொற்களை தெரிவுசெய்க.

**[நினைவகத்தட்டு, தலை,வலுத்தொடுப்பான்,IDE தொடுப்பான்,USB பளிச்சீட்டு செலுத்தி, நினைவக அட்டை,Blu-Ray disc, CD- R,சுட்டி, விசைப்பலகை,USB Port , HDMI Port ,ROM, RJ 45 Port, Printer, Microphone]**

1) உலோகத்தட்டாக இருக்கும் அதேவேளை இதன் இரு பக்கங்களிலும் தரவுகளை தேக்கிவைக்கலாம் (……A…..)
2) நினைவகத்தட்டிற்கு தரவுகளைப்பரிமாறும் (…..B……)
3) இலக்கமுறைக்கமரா, செல்பேசி , கணினி விளையாட்டு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும்(….C…..)
4) அதிகளவு தரவுகளை தேக்கிவைக்கத்தக்க பெரிய கொள்ளளவைக் கொண்ட ஒளியியல் சாதனம் (….D…)

5) ஒரு தடவை மாத்திரம் தரவுகளையும் தகவல்களையும் எழுதி பின்னர் வாசிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்தப்படும்(…E…)
6) PS/2துறையில் ஊதா நிறமுள்ள துறையில் இணைக்கப்படுவது(…F…)
7) மடிக்கணினிகளில் காணப்படும் விசேடமான துறை(…G…)
8) தாய்ப்பலகையில் இணைக்கப்படக்கூடிய ஓர் சாதனம்(…H…)
9) இணைய இணைப்பின் போது பயன்படுத்தப்படுவது(…I…)
10) செவிப்புலத்துறையில் இணைக்கப்படக்கூடிய ஓர் சாதனம்(..J…)

**[5 , 5புள்ளிகள்]**

**3)** A) 1 – 4 வரையிலான இலக்கங்களிற்கு பொருத்தமான முகப்பு அடையாளங்களை இட்டு நிரப்புக

| நிரல் A | நிரல் B |
|---|---|
| 1.நுண்ணலைகள் | A. செய்மதித்தொடர்பாடல் |
| 2.வானொலி அலைகள் | B. தொலைக்காட்சி சேய்மைக் கட்டுப்படுத்தி |
| 3.ஓரச்சு வடம் | C. வை - பை , புளூ-ரூத் |
| 4.செங்கீழ்க்கதிர்கள் | D. தொலைக்காட்சி அன்ரனா |


1- ......................... 2- ..................... 3- ......................... 4- .....................

B) பட்டியலை உபயோகித்து கீழேயுள்ள கூற்றுகளின் இடைவெளிகளை நிரப்புக.


**(குவியம் ,வைபை ஏற்பி , முழுஇருவழிப்போக்கு , ஒற்றைமுறை, அரைஇருவழிப்போக்கு)**

1. ஆளி ஆனது........................................ முறையில் தரவுகளைப் பரிமாற்றும்.
2. இரண்டு அல்லது பல கணினிகளிற்கிடையே தொடர்பை ஏற்படுத்த பயன்படும் சாதனம்.............................. ஆகும்.
3. .செல்பேசிகளிற்கும் மடிக்கணினிகளிற்கும் விரைவான இணையத் தொடுப்பை ஏற்படுத்துவதற்கு ............................................ ஊடகமாக அமைகின்றது.
4. வலையமைப்பில் பாட்டை இடத்தியலில் (Bus Topology) ஏற்படும் பிரதிகூலங்கள் இரண்டு தருக?
5. வலையமைப்பாக்கத்தின் அனுகூலங்கள் பிரதிகூலங்கள் ஒவ்வொன்றிற்கும் 2 வீதம் குறிப்பிடுக.


C)



**A**



**B**



**C**

மேற்காட்டப்பட்டுள்ள உருவப்படங்கள் கணினி வலையமைப்பின் பிரதான வகைகளை குறித்துக்காட்டுகின்றது.A,B,Cஆகிய முகப்பு அடையாளங்களிற்கு பொருத்தமான சரியான வலையமைப்பின் பெயர்களை எழுதுக.


A - ...................................................
B - ...................................................
C - ...................................................

**[2, 5 , 3புள்ளிகள்]**


kalvi.lk

**4)**

1. பின்வரும் பதின்ம எண்களை இரும எண்களாக மாற்றுக?
   1. $68_{10}$ 2. $45_{10}$
2. பின்வரும் பதினறும எண்களை இரும எண்களாக மாற்றீ செய்க?
   1. $23D_{16}$ 2. $B2C_{16}$
3. RGB பெறுமானம் 255,182,193 ஐ உடைய இளம்சிவப்பு வர்ணத்திற்குரிய பதினறும குறியீடு யாது?
4. பின்வரும் தர்க்கச்சுற்றினை கருதுக




   1. வருவிளைவுY ற்குரிய பூலியன் கோவையினை எழுதுக?
   2. மேற்காட்டப்பட்ட பூலியன் கோவைக்குரிய உண்மை அட்டவணையினை அமைக்க?
   3. ஒருங்கிணைந்த தருக்கச்சுற்றானது இரும பெறுமதிகள் 000 தொடக்கம் 111 வரை(உ+ம்..0 – 7) பிரதிநிதித்துவம் செய்கின்ற A,B,C ஆகிய மூன்று உள்ளீடுகளைக் கொண்டுள்ளது. A,B,C ன் தசம உள்ளீடானது இரண்டினால் வகுபடுமெனின் (பூச்சியம் தவிர்ந்த) வருவிளைவு(F) 1 ம் ஏனைய சந்தப்பங்களில் வருவிளைவு 0 ம் வெளியீடாக காட்டப்படும். இச்சந்தர்ப்பத்தை விளக்குவதற்கான உண்மை அட்டவணையினை வரைக.

**[2, 2 , 1 ,1 ,1 ,3 புள்ளிகள்]**

**5)** A)



1. வீதி நெரிசலைத்தவிர்த்து போக்குவரத்தை எளிதாக்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள தொகுதிகள் 2 தருக?
2. கணினியின் தலைமுறைகளின் வழியே அதிகரித்துச.செல்லும் பண்புகள் 2 தருக?
3. பணிசெயல்முறைமையின் தொழிற்பாட்டிற்கமைய அவற்றை வகைப்படுத்துக?
4. வட்டுப்பிரிவிடலின் அனுகூலங்கள் 2 தருக?
5. நிகழ்நிலை அங்காடி மூலம் பொருட்களை கொள்வனவு செய்வதனால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள் 4 தருக?

B) கீழ் காணப்படும் கூற்றுக்கள் சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் குறிப்பிடுக?


1. Joseph Jacquard என்ற விஞ்ஞானி துளை அட்டை மூலம் தொழிற்படுத்தப்படும் நெசவுப்பொறியை அமைத்தார்.......................
2. அளிக்கப்பட்ட கோப்புக்களை ஒருபோதும் மீளப்பெற்றுக்கொள்ள முடியாது..................
3. கோப்பின் பெயரையும் கோப்பு நீட்சியையும் பிரிக்கும் குறியீடு @ ஆகும்..................
4. ஓர் கோப்பு உறையானது ஒன்று அல்லது பல கோப்புக்களை கொண்டிருக்கலாம்..................... **[1, 1 , 2 ,2 ,2 ,2 புள்ளிகள்]**


kalvi.lk

6) A)நிரல் A ல் முகப்பு அடையாளங்களிற்கு பொருத்தமானவற்றை நிரல் B யிலிருந்து தெரிக.

| | நிரல் A | | நிரல் B |
|---|---|---|---|
| A |  | 1) | Crop |
| B |  | 2) | Insert right |
| C |  | 3) | Split table |
| D |  | 4) | Wrap text |
| E |  | 5) | Text directions |

B) அட்டவணையானது சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் கொண்டுள்ள சில வசதிகளை உள்ளடக்கியுள்ளது. அவ் வசதிகளைப் பயன்படுத்துவதற்கு தேவையான முகப்பு அடையாளங்களினை இனங்கண்டு எழுதுக.





kalvi.lk

| | | |
|---|---|---|
| 1. | பக்கங்களிற்கு இலக்கமிடுதல் | |
| 2. | எழுத்துக்களின் அளவை அதிகரித்தல் | |
| 3. | ஆவணங்களில் படங்களினை உட்புகுத்துதல் | |
| 4. | ஓர் பந்தியில் உள்ள முதல் எழுத்தை 3 வரிகளிற்கு பெரியதாக்குதல். | |
| 5. | ஆவணங்களில் அட்டவணைகளை உட்புகுத்துதல் | |
| 6. | ஓர் ஆவணத்தின் அனைத்து பக்கங்களிலும் ஒரே மாதிரியான தலைப்பை இடுதல் | |
| 7. | ஆவணங்களில் உருவங்களை வரைதல் | |
| 8. | ஓர் பந்தியில் காணப்படும் வசனங்கள் அனைத்தையும் சிறிய எழுதத்துக்களாக்குதல் (small letters) | |
| 9. | ஆவணத்தின் ஓர் பக்கத்தில் காணப்படும் மாணவர்களது பெயர்களை ஆங்கில நெடுங்கணக்கு வரிசையில் ஒழுங்குபடுத்துதல். | |
| 10. | ஆவணங்களில் வரைபுகளை உட்புகுத்துதல் | |

[5,5புள்ளிகள்]

Education கல்வி අධ්‍යාපන

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457